**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி, L.L.M.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி
2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் புதன் கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம் சித்திரை மாதம் 02 ம் நாள்

**TNMY09-000149-2025**

**OS.No.11/2025**

நிசார்பானு .....வாதி

//எதிர்//

முகம்மது கபீர் ..... பிரதிவாதி

இவ்வழக்கானது 03.02.2025அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 09.04.2026–ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.S.S குணசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் கடந்த 03.03.2025 அன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும் வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இது நாள் வரை, இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை :–**

இவ்வழக்கானது, வாதியின் கிரைய பத்திரமான 24.01.2012ஆம் தேதியில் ஏற்பட்ட பத்திரத்தில் கண்ட தரங்கம்பாடி தாலுக்கா, பொறையார் கிராமத்தின் புஞ்சை புல எண்கள் 78/1, 78/2 ஆகிய சர்வே எண்கள் தவறு என்றும், சரியான புல எண். 78/5A1A1 என்றும் விளம்புகை செய்யக்கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.04.15 17:46:34 +0530

**<u>திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:</u>**

2. தாவா சொத்தினை வாதி கடந்த 24.01.2012 ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்று தாவா சொத்திற்கான பட்டாவையும் தனது பெயரில் மாற்றிக்கொண்டு அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்திற்கான பட்டா 1469, 1558 என்றும், மேற்படி வாதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்தில் தாவா சொத்தில் 1 வது அயிட்டத்திற்கு புல எண். 78/1 என்றும், 2 வது அயிட்டத்திற்கு புல எண்.78/2 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தினை தில்லையாடி சரக குறுவட்ட நில அளவையர் மூலம் 30.11.2023 அன்று அளவீடு செய்து பார்த்தபோது தாவா சொத்தின் புல எண் தவறாக உள்ளது என்றும், அதன் சரியான புல எண். 78/5A1A1 என குறிப்பிட்டு சான்று வழங்கியதாகவும், வாதி பிரதிவாதியை அணுகி சரியான புல எண்ணை குறிப்பிட்டு பிழைத்திருத்த பத்திரம் செய்து கொடுக்கக் கேட்டபொழுது பிரதிவாதி மறுத்துவிட்டதாகவும் எனவே வாதி, பிரதிவாதி பேரில் தாவா சொத்து குறித்து விளம்பல் பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.2 ஆக தில்லையாடி கிராம நிலஅளவையர் முருகவேல் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.2ன் மூலம் வா.சா.ஆ.5 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த வழக்கில் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப் பட்டிருந்தாலும் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் மூலம் தனது தரப்பு வழக்கை



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:46:43 +0530

நிரூபித்துள்ளரா? என்பது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், வாதி தரப்பில், தாவா சொத்தினை வாதி கடந்த 24.01.2012 ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்றதாகவும், அந்த ஆவணத்தில் தாவா சொத்தில் 1 வது அயிட்டத்திற்கு புல எண். 78/1 என்றும், 2 வது அயிட்ட த்திற்கு புல எண்.78/2 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தினை தில்லையாடி சரக குறுவட்ட நில அளவையர் மூலம் 30.11.2023 அன்று அளவீடு செய்து பார்த்தபோது தாவா சொத்தின் புல எண் தவறாக உள்ளது என்றும், அதன் சரியான புல எண். 78/5A1A1 என குறிப்பிட்டு சான்று வழங்கியதாகவும், வாதி பிரதிவாதியை அணுகி சரியான புல எண்ணை குறிப்பிட்டு பிழைத்திருத்த பத்திரம் செய்து கொடுக்கக் கேட்டபொழுது பிரதிவாதி மறுத்துவிட்டதாகவும் எனவே, கிரயப்பத்திரத்தில் சொத்துவிபரத்தில் கண்டுள்ள புல எண். 78/1 மற்றும் 78/2 தவறு என்றும், அதன் சரியான புதிய புல எண். 78/5A1A1 என விளம்புகை செய்யுமாறும் வாதி தனது வழக்கை தனது தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதாகவும் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

**6. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

7. வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். அவர் வழக்குரையை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். வாதி தாவா சொத்தை 24.01.2012 அன்று பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்றதாக கூறியுள்ளார். அந்த கிரய ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதியின் கிரய முன்னவரான முகம்மது கபீர் பெயரில் உள்ள கிரய ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி பெயரில் உள்ள கணினி பட்டா வா.சா.ஆ.3 ஆகவும், வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தில்லையாடி கிராம நில அளவையர் முருகவேல் என்பவர் வா.சா.ஆ.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், **“ பொறையார் கிராம புஞ்சை சர்வே எண். 78/1 மற்றும் 78/2 ஆகிய எண்கள் சர்வே எண்**



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:46:52 +0530

**78/5A1A என மாற்றம் அடைந்திருந்தது. 3 மாதங்களுக்கு முன்னர் மேற்படி புல எண். 78/5A1A 1 என மாற்றப்பட்டுள்ளது. சர்வே எண். 78/1ன் விஸ்தீரணம் 386.50 சதுர மீட்டர் ஆகும். சர்வே எண். 78/2ன் விஸ்தீரணம் 59.50 சதுர மீட்டர் ஆகும். மொத்த விஸ்தீரணம் 446 சதுர மீட்டர் ஆகும். மேற்படி புல எண்களின் புதிய புல எண்ணான 78/5A1A1 என்ற எண்ணின் மொத்த விஸ்தீரணம் 446 சதுர மீட்டர் ஆகும்"** என சாட்சியம் அளித்துள்ளார். அவர் கொடுத்த வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.2 மேலும் தனது சாட்சியத்தில், **" வா.சா.ஆ.5 ஆன ஆவணத்தை வழங்கியபோது தாவா சொத்தின் புல எண். 78/5A1A ஆக இருந்தது"** என சாட்சியம் அளித்துள்ளார். வாதி கிரயம் பெற்றுள்ள தாவா சொத்தின் அமைவிடம், விஸ்தீரணம், நான்கெல்லை ஆகியவற்றில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதும், புல எண் மட்டுமே மாறியுள்ளது என்பதும் தெரிய வருகிறது. எனவே, Boundaries Prevail Over Survey Number என்பதன் அடிப்படையில் வாதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்தில் உள்ள புல எண். **78/1** மற்றும் **78/2** என்பது தவறு என்றும், சரியான புல எண்.**78/5A1A1** என வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. வாதியின் கூற்றை மறுத்து கூற வேண்டியது பிரதிவாதியின் கடமையாகும். ஆனால் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி அவரது தரப்பு வழக்கை எடுத்துரைக்கவில்லை. எனவே, வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. **முடிவாக, வாதியின் கிரைய பத்திரமான 24.01.2012ஆம் தேதியில் ஏற்பட்ட பத்திரத்தில் கண்ட தரங்கம்பாடி தாலுக்கா, பொறையார் கிராமத்தின் புஞ்சை புல எண்கள் 78/1, 78/2 ஆகிய சர்வே எண்கள் தவறு என்றும், சரியான புல எண். 78/5A1A1 என்றும் விளம்புகை செய்து வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு வழங்கி வாதிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு , அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு,



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:47:05 +0530

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 15.04.2026 இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:47:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி

**பின் இணைப்பு:-**

**வாதி தரப்பு சாட்சிகள்:-**

**வா.சா.1. நிசார்பானு (வாதி)**

**வா.சா.2. முருகவேல் (தில்லையாடி கிராம நிலஅளவையர், )**

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| வா.சா.ஆ1 | 24.01.2012 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து வாதியின் பெயரில் உள்ள கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ2 | 20.05.2009 தேதியிட்ட வாதியின் கிரய முன்னவர் முகம்மது கபீர் பெயரில் உள் கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ3 | 19.10.2023 தேதியிட்ட கணினி பட்டா |
| வா.சா.ஆ.4 | 08.12.2023 தேதியிட்ட கணினி பட்டா |
| வா.சா.ஆ.5 | 30.11.2023 தேதியிட்ட தில்லையாடி சரக குறுவட்ட நில அளவையர் வழங்கிய சான்று |

**பிரதிவாதி தரப்பு சாட்சி:- இல்லை**

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:-** இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.04.15 17:47:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி